கடல்சார் காற்றாலைத் திட்டம் மற்றும்

எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மக்களவையில் – எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 24 - திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று மக்களவையில், கோடைக்காலத்தில் அதிகரித்து வரும் மின்சாரத் தேவை, எல் நினோ உள்ளிட்ட வானிலை மாற்றங்களால் உருவாகும் சவால்கள், நிலக்கரி கிடைப்புத் தன்மை, மின்சார விநியோகப் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒருங்கிணைப்பு மற்றும் நாட்டின் நீண்டகால எரிசக்தி பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து நட்சத்திர அந்தஸ்து பெற்ற கேள்வி எழுப்பினார். அதற்கு, ஒன்றிய அரசின் மின்துறை மாண்புமிகு அமைச்சர் மனோகர் லால் அவர்கள் பதிலளித்தார்.

இதற்கு ஒன்றிய அரசின் மின்துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

நாட்டில் போதுமான அளவில் மின்சாரம் கிடைப்பதாகவும், 2026 ஜூன் நிலவரப்படி நாட்டின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் 548.86 ஜிகாவாட் ஆக உயர்ந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். 2014 ஏப்ரல் முதல் 324.7 ஜிகாவாட் புதிய மின் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டதன் மூலம் மின் பற்றாக்குறை நிலை நீக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இதே காலத்தில் 2,18,267 சுற்று கிலோ மீட்டர் மின் பரிமாற்றக் கோடுகள், 9,47,405 எம்.வி.ஏ. மின்மாற்றுத் திறன் மற்றும் 84,390 மெகாவாட் இடைமாநில மின் பரிமாற்றத் திறன் உருவாக்கப்பட்டுள்ளதால், மொத்த இடைமாநில மின் பரிமாற்றத் திறன் 1,20,340 மெகாவாட் ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எல் நினோ தாக்கத்தால் மின்சாரத் தேவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாகவும், 2026 ஏப்ரல் முதல் ஜூன் வரை உச்சபட்ச மின் தேவை கடந்த ஆண்டைவிட சுமார் 12 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும், 2026 மே மாதத்தில் 270.8 ஜிகாவாட் என்ற நாட்டின் வரலாற்றிலேயே அதிகபட்ச உச்ச மின் தேவை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன், 2026 ஜூலை மாதத்தில் அகில இந்திய உச்ச மின் தேவை 270 ஜிகாவாட்டை இரண்டு முறை கடந்த போதிலும் அவையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், 2026 ஜூலை மாதத்தில் 103.7 ஜிகாவாட் (சூரிய மின் சாரம் - 75 ஜிகாவாட்; காற்றாலை - 28.7 ஜிகாவாட்) என்ற சாதனை அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

நிலக்கரி போதுமான இருப்பு உள்ளது!

தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்ய போதுமான நிலக்கரி கையிருப்பு, எரிபொருள் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் பரிமாற்றத் திறன் மேம்பாடு, அனைத்து மின் உற்பத்தி வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்துதல், நீர்மின் உற்பத்தியை உச்சநேரத் தேவைக்கேற்ப திட்டமிடுதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பேட்டரி மின் சேமிப்பு அமைப்புகளை விரைவாக மின் வலையமைப்புடன் ஒருங்கிணைத்தல், வேளாண் மின் தேவையை பகல்நேர சூரிய மின் பயன்பாட்டிற்கு மாற்றுதல், எரிசக்தி சிக்கன நடவடிக்கைகளை ஊக்குவித்தல், நிலக்கரி விநியோகத்தை மின்துறை, நிலக்கரித் துறை, ரயில்வே உள்ளிட்ட துறைகள் இணைந்து தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் உச்ச மின் தேவைக் காலங்களில் அனல்மின் நிலையங்களின் பராமரிப்பை குறைத்தல் உள்ளிட்ட குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

2026 ஜூலை 18 நிலவரப்படி அனல்மின் நிலையங்களில் 41.4 மில்லியன் டன் நிலக்கரி கையிருப்பு இருப்பதால், 85 சதவீத நிலையை சுமை காரணி அடிப்படையில் 13 நாட்களுக்கு போதுமான இருப்பு உள்ளதாகவும் கூறினார்.

தீன்தயாள் உபாத்யாய கிராம் ஜோதி யோஜனா, ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா (சௌபாக்யா) ஆகிய திட்டங்களின் கீழ் 1.85 லட்சம் கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், 18,374 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டதுடன், 2.86 கோடி குடும்பங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கிராமப்புறங்களில் சராசரி மின் விநியோக நேரம் 12.5 மணி நேரத்திலிருந்து 22.6 மணி நேரமாகவும், நகர்ப்புறங்களில் 22.1 மணி நேரத்திலிருந்து 23.4 மணி நேரமாகவும் உயர்ந்துள்ளதாகவும் கூறினார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே இலக்கை எட்டியுள்ளது!

தேசிய அளவில் மின் விநியோக நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பு 22.62 சதவீதத்திலிருந்து 15.04 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், ஒரு யூனிட் மின்சாரத்தின் சராசரி வழங்கல் செலவு மற்றும் வருவாய் இடைவெளி 0.78 இலிருந்து 0.06 ஆக குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 2025 ஜூலை 29 அன்று நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் 51.5 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டதுடன், 2025-26ஆம் ஆண்டில் 64,695 மெகாவாட் புதிய மின் உற்பத்தித் திறன், அதில் 50,905 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் சேர்க்கப்பட்டதாகவும் கூறினார்.

2026 ஜனவரி 14 அன்று உலகின் மிகப்பெரிய ஒத்திசைவு தேசிய மின் வலையமைப்பாக நாடு உருவெடுத்ததுடன், நாட்டின் மின் பரிமாற்ற வலையமைப்பு 5.08 லட்சம் சுற்று கிலோமீட்டர் பரிமாற்றக் கோடுகளையும், 1,469 ஜிகா வோல்ட் ஆம்பியர் மொத்த மின்மாற்றுத் திறனையும் எட்டியுள்ளதாகவும், 2025-26ஆம் ஆண்டில் மின்சாரப் பற்றாக்குறை பூஜ்ஜியமாக குறைந்துள்ள தாகவும், கோப்26 மாநாட்டில் அளித்த உறுதிப்பாட்டின்படி, 2030ஆம் ஆண்டிற்கான தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தை புதைபடிவ எரிபொருள் அல்லாத மூலங்களிலிருந்து பெறும் இலக்கை 2025ஆம் ஆண்டிலேயே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாடு எட்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீண்டகால எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய 2030ஆம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறன், 2035-36ஆம் ஆண்டில் 786 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறன் மற்றும் 315 ஜிகாவாட் நிலக்கரி மின் உற்பத்தித் திறன், 2047ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் அணு மின் திறன், 100 ஜிகாவாட் நீரேற்று மின் சேமிப்புத் திட்டங்கள், 80 ஜிகாவாட் பேட்டரி மின் சேமிப்பு அமைப்புகள் மற்றும் 94 ஜிகாவாட் நீரேற்று மின் சேமிப்புத் திறன் ஆகிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டம், கடல்சார் காற்றாலைத் திட்டம், உயர் திறன் சூரிய ஒளிமின்னழுத்த தொகுதிகளுக்கான உற்பத்தி ஊக்கத் திட்டம், மேம்பட்ட வேதியியல் மின்கல சேமிப்பு, மின்சார வாகன சார்ஜிங் கட்டமைப்பு, பேட்டரி மின் சேமிப்பு அமைப்புகளுக்கான நிதி இடைவெளி நிரப்பும் திட்டம், நீரேற்று மின் சேமிப்புத் திட்டங்கள் மற்றும் எரிசக்தி சேமிப்பு அமைப்புகளுக்கான புதிய வழிகாட்டுதல்கள் மூலம் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பையும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாற்றத்தையும் வலுப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஒன்றிய அரசின் மின்துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் பதிலளித்துள்ளார்.

ஜனநாயகனும் மீனவ நண்பனும்!

எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து விஜய்க்கும், முதலமைச்சரான பிறகு அவர் ஹீரோவாக நடித்த படம் வெளியாகியுள்ளது என்ற 'பெருமை' கிடைத்துள்ளது. அத்துடன் கூடுதல் 'பெருமை' ஒன்றும் உண்டு.

1977ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக வெற்றி பெற்ற நிலையில், எம்.ஜி.ஆர் ஹீரோவாகவும் டைரக்டராகவும் இருந்த 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தின் ஷூட்டிங்கை முடித்துவிட்டு வருவதற்காக முதலமைச்சராகப் பதவியேற்கும் நாளைத் தள்ளிப்போட்டார். முதலமைச்சரான பிறகு, போஸ்ட் புரடக்ஷன் வேலைகள் நடந்து 1978 ஜனவரியில் படம் வெளிவந்தது. மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்திற்கு முன்பாகவே, ஸ்ரீதர் இயக்கத்தில் எம்.ஜி.ஆர் நடித்த மீனவ நண்பன் படம் முழுமையாக முடிந்துவிட்டது. எம்.ஜி.ஆர். முதலமைச்சரான பிறகு, திரைக்கு வந்த அவரது முதல் படம் 'மீனவ நண்பன்'தான்.

மீனவ மக்களின் உரிமைக்காக அவர்களோடு ஒருவராக வாழ்ந்து வில்லன்களை எதிர்த்து வெற்றி பெறுவதுதான் மீனவநண்பன் படத்தின் கதை. 'மீனவ நண்பன்' எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோதுதான், சென்னை மெரினா கடற்கரையை அழகுப்படுத்துவதாகக் கூறி, மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, காவல்துறை அதிகாரி தேவாரம் தலைமையிலான போலீஸ் படையைக் கொண்டு மீனவர்களை சுட்டுக் கொன்றது அரசு.

கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்.

விஜய் முதலமைச்சரான பிறகு அவரது ஜனநாயகன் படம் வெளியாகியுள்ளது. நீட் தேர்வை எதிர்த்து ஜனநாயக வழியில் போராடும் மாணவர்கள் மீது 'ஜனநாயகன்' விஜய் அரசு கொடூரத் தாக்குதல் நடத்தி விரட்டி அடிக்கிறது. கல்லூரிக்குள் புகுந்து கைது செய்கிறது. மீனவநண்பன் எம்.ஜி.ஆர் மெரினாவில் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். ஜனநாயகன் விஜய், மாணவர்களின் ஜனநாயகப் போராட்டங்கள் நடக்காதபடி மெரினாவையே மூடிவிட்டார்.

25 புதிய நிலக்கரி வாயுவாக்க திட்டங்கள் மூலம்

நாட்டில் 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்!

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 24 - நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தவும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களின் மீதான சார்பைக் குறைக்கவும் செயல்படுத்தப்பட்டு வரும் நிலக்கரி வாயுவாக்க (Coal Gasification) திட்டங்கள் குறித்து வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணை அமைச்சர் சதீஷ் சந்திர துபே அவர்கள் எழுத்து பூர்வமாக அளித்த பதில்

மத்திய அரசின் 8,500 கோடி நிதி ஊக்கத் திட்டத்தின் கீழ் தற்போது 8 நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்கள் ஒப்புதல் பெற்று பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்தத் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வந்தவுடன், இறக்குமதி செய்யப்படும் இயற்கை எரிவாயு, எத்தனால் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறை மூலப்பொருட் களின் தேவை குறைவது டன், ஆண்டுக்கு சுமார் 16,500 கோடி அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், இந்தத் திட்டங்கள் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, உள்நாட்டு நிலக்கரிக்கு கூடுதல் மதிப்பை உருவாக்கும் என்றும், ரசாயனம், பெட்ரோ கெமிக்கல், உரம், ஹைட்ரஜன் மற்றும் சுத்தமான எரிபொருள் உற்பத்தி போன்ற தொழில்துறைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்களை விரைவாக செயல்படுத்தும் நோக்கில் முதலீட்டாளர்களுக்கு நிதி ஊக்கங்கள், தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பல்வேறு கொள்கைச் சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், இந்தத் துறையில் முதலீடுகளை அதிகரிக்க மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் விளக்கமளித்தார்.

மேலும், 2026 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய ஊக்கத் திட்டத்தின் மூலம் சுமார் 25 புதிய நிலக்கரி வாயுவாக்கத் திட்டங்கள் உருவாகும் என்றும், ரூ.2.5 லட்சம் முதல் ரூ.3 லட்சம் கோடி வரை முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும், 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார். இத்திட்டங்கள் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால் ஆண்டுதோறும் ரூ.1.5 லட்சம் கோடி அளவுக்கு அந்நியச் செலாவணி சேமிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்டீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி முன்னிலை!

இராயபுரம் முன்னாள் பகுதிச் செயலாளர் கட்டீஸ் அ.பழனி 7ஆம் ஆண்டு நினைவு நாள் ! நலஉதவிகள்!

ஆர்.எஸ்.பாரதி – டி.கே.எஸ்.இளங்கோவன் வழங்கினர்!

சென்னை, ஜூலை.24

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் இராயபுரம் பகுதி முன்னாள் செயலாளர் கட்டீஸ்.அ.பழனி அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு (21.07.2026 செவ்வாய்கிழமை) மாலை 4:00 மணியளவில் பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டையில்

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்டீஸ்.ப.சோம சுந்தரமூர்த்தி தலைமையில் ஐட்ரீம்.ஆர். மூர்த்தி, இரா.செந்தில்குமார் வ.பெ.சுரேஷ் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

வெ.சு.சத்தியநாராயணன், இர.பொன்இளவரசன், வை. கௌதமன், இ.ரவிகுமார், க. கலைச்செல்வன், ஆகியோர் தொடக்கவுரை நிகழ்த்தினர். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் அணி செயலாளர் டாக்டர். அ.சுபேர்கான், தா.இளைய அருணா எம்.சி, பி.டி.பாண்டிசெல்வம், ந. மனோகரன், என்.மருதுகணேஷ், மு.கோபி, க. நாகம்மை, நேதாஜி.யு.கணேசன், வே.சிவக்குமார், இராயபுரம்.சு.சேகர், நா. சண்முகம், கி.ராஜேந்திரன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, லயன்.எம். தீனதயாளன், லியோ.டி. சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், விமலா மோகன், பி.செந்தில்குமார், ஒலி ஒளி ஆ.பாபு, டாக்டர்.வை.கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், வி.வி. ரமேஷ், ரெயின்போ.என். விஜயகுமார், க. கோவிந்தசாமி, ஜெ.கே.நாதன், பி.சதீஷ்குமார், பா.வேளாங்கன்னி எம்.சி, த.ஜெயபாலன், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, எம். கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு. திருஞானம், வே. மலையம்மாள், இ.மதன், எஸ்.பி.எஸ். புத்தன், நெல்லை.எம்.எம். சாமி, எரிமலை பாலு, என். ஏழுமலை, ஏ.வேணுகோபால், ஆர்.வி.கணேஷ், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், எம்.எல். ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், ஜெ.கௌரீஸ்வரன், மா.நாகராசன், ச.தமிழ்செல்வன், எல்.சீனிவாசன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எஸ்.சுரேஷ், ஐசிஎப். பழனி, எஸ்.யுவராஜ், இரா. பொன்முடி, ந.குமார் எம். பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகமதுமொய்தீன், ஏ. அன்வர், பி.கே.மூர்த்தி, ஜெ. சுரேஷ்பாபு, எம்.இ.சாகுல்அமீது, ப.ஆ.சண்முகம், டாக்டர்.ஆர்.பாண்டியராஜன், எம்.டி.மதன்ராஜ், மு.சாகுல்மீரான், ந.ம.மகேஷ்குமார், சி. லிங்கேசன், எஸ்.குமார், ஆர். பரந்தாமன், டி.கருணாகரண், யு.அனிபா, எஸ்.மணிகண்டன், எஸ்.அசோக், எல்.கிருஷ்ணஹரிஹரன், பா.கதிரவன், டி.லெனின், எம்.டில்லிபாபு, சீமென்.கே.ரங்கராஜ், ஆ. ஆனந்தன், கோ.ஹரிஷ்குமார், ஜெ.வசந்தகுமார், வி.கே. ராஜ், பி.பிரபாகரன், ர.இம்ரான், பீ.மகேந்திரன், கே.சிவதனுஷ், எம்.எம்.சந்துரு, த. ரவி, பி.எஸ்.வெங்கடேசன், எஸ்.கே.செந்தில்குமார், சுவீஸ்.ஆர்.இளையராஜா, எஸ்.குமரன், பி.சுரேகா, ஆர். விஜயவர்மன், எஸ்.மாரிமுத்து, ஐ.ராஜேஷ், என். அலெக்ஸ்நாதன், கே.ஐனுல்ஹக், எம்.வல்லவராஜ், ஆர். பிருந்தா, ஏ.குமார், எம். சௌந்தரபாண்டியன், ப.ஆனந்தகுமார், எஸ்.எஸ். சங்கர், ஆர்.தங்கராஜ், கே.சி. பிரதாபன், என்.முத்துகுமார், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், கட்டீஸ்.எல்.ராஜீ, ஜி.விநாயகம், கே.கைலாசம், எஸ்.ராஜசேகர், ஆர்.பாரதிதாசன், ஏ.ஞானசேகர், இராயபுரம் ராஜ், ஜே.சந்துரு, ஜி.உமாபதி, பீ.சத்தியநாராயணன், வி.சரவணன், ஏ.சந்திரசேகர், என்.ஹயாத்பாட்ஷா, ஆ. ரமேஷ், பீ.ஞானம்,

துரைநாராயணன், மோகன்ராஜ், ராஜ்கமல், ஜி.பிரபு, ஜி.பாலா, எஸ். பரணி, ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பி. ரவிசங்கர், நாட்டாமை. கே.லட்சுமணன், எம்.என். வெங்கட், மோ.ரவிகுமார், சு. சசிதரன், மூ.வினோத்குமார், இரா.நரேஷ், என். சுனில்குமார், ம. அருண்பிரபாகரன், கு.கௌரிநாதன், ஜி.கோதண்டராமன், ஏ.கதிரவன், வி.பிரேம்குமார், கொரியர்.எம்.முருகன், த.கு.பன்னீர்செல்வம், பா.சுதாகர், க. பாலகிருஷ்ணன், கா.ரீதர், எம்.தங்கராஜ், கோ.சாய்மகேஷ், ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். என்.அப்துல்மாலிக் நன்றி கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்
ஜூலை 24 (2016)



ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பரணிதரன் தலைமையில் இ.எஸ்.தமிழ் கொடி, சித்தார்த் திருநாவுக்கரசு முன்னிலையில்

புழல் து.திருநாவுக்கரசு நினைவு நாள் - படத்திறப்பு!

புழல் எம்.நாராயணன் – கழகத்தினர் பங்கேற்பு!

மாதவரம், ஜூலை 24- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி 23வது வட்ட முன்னாள் செயலாளர், புழல் ஒன்றிய முன்னாள் இளைஞரணி அமைப்பாளர், புழல் தமிழ் சங்க தலைவர், தலைமைக் கழக சொற்பொழிவாளர் பு.து. திருநாவுக்கரசு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருவுருவப்பட திறப்பு மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புழல் காந்தி தெருவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை பரணிதரன் ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார். முன்னாள் மாவட்ட பிரதிநிதி இ.எஸ். தமிழ் கொடி, 24 வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சித்தார்த்த திருநாவுக்கரசு, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு புழல் திருநாவுக்கரசு அவர்களின்திருவுருவப்படத்தை திறந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் புழல் ந. எழில் ராவணன், ந.குணாநிதி, எம்.உதய பாரி, எம். உதயகுமார், மகேந்திரன் முரளிவரன் சீனு நாகராஜன், ரூசோ, ஆனந்த் ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

மாதவரம் சட்டமன்ற தொகுதி 23வது வட்ட முன்னாள் செயலாளர் நினைவில் வாழும் புழல் து. திருநாவுக்கரசு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் திருவுருவ படத்தை திறந்து வைத்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவை வழங்கினார்.பரணிதரன் தலைமையில் இ.எஸ். தமிழ் கொடி, சித்தார்த் திருநாவுக்கரசு முன்னிலையில் நிர்வாகிகள் புழல் ந. எழில் இராவணன், ந.குணாநிதி, எம். உதயபாரி, எம். உதயகுமார், சீனு நாகராஜன், முரளிவரன், ரூசோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.